**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.155/2019**

**CNR.No.TNCB19000**

Date:25.02.2025 PW1

| பெயர் | கலையரசு | வயது | 50 |
|---|---|---|---|
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | திம்மம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 25th February 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு 1999 ம் ஆண்டு திருமணம் ஆனது. எனது சகோதரிகளுக்கு எனக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. எனது சகோதரிகளின் திருமணத்திற்கு முன்பு தாவா ஏ அயிட்ட சொத்தில் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்தோம். கூட்டுக்குடும்பமாக இருந்த சமயத்தில் எனது அம்மாவிற்கும் எனக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லையென்றால் சரியல்ல. தாவா ஏ அயிட்ட சொத்தில் வசிக்கவில்லை என்றும் எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்தில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல.

பாகப்பிரிவினை சமயத்தில் தனித்தனியாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினைக்கு ஒரு வருடத்திற்கு முன்பு நான் என் அம்மாவிடம் பிரச்சினை செய்து எனது அம்மாவை வீட்டை விட்டு துரத்தி விட்டேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என் அப்பா மட்டும் என்னுடன் இருந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மாவை நான் வீட்டை விட்டு துரத்தியதால் எனது அம்மா 1ம் பிரதிவாதியின்வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது திருமணம் பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு நடந்தது என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் எனது சகோதரிகளுக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சொத்துக்கு பதிலாக பணம் வாங்கிக்கொண்டார்கள். ஆனால் சொத்து எதுவும்

ஒதுக்கப்படவில்லை என்றால் அவர்கள் வேண்டாம் என்று சொல்லி பணம் வாங்கிக்கொண்டார்கள்.

எனது சகோதரிகளுக்கு சொத்து ஒதுக்காததால் பாகப்பிரிவினைக்கு எனது சகோதரிகள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. குடும்பத்தில் பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக 1, 2 பிரதிவாதிகள் எனது அம்மாவை சமாதானப்படுத்தி பாகப்பிரிவினை பத்திரத்தில் கையெழுத்து போடச்சொன்னதால் மேற்படி பாகப்பிரிவினையை ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினைக்கு பிறகு எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் மாட்டுச்சாலையை சரிசெய்து தற்போது குடியிருந்து வருகிறேன். அந்த சமயத்தில் எனது அப்பா என்னுடன் இருந்தார் என்றால் எனது அப்பா எல்லோருடைய வீட்டிற்கும் போவார்.

பாகப்பிரிவினைப்படி எனது அப்பாவிற்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தையும் எனக்கு எழுதி கொடுக்க வேண்டும் என்று சொல்லி மிரட்டியதால் அது சம்பந்தமாக காரமடை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது அப்பாவை மிரட்டியதால் எனது அப்பாவும் அம்மாவும் 1ம் பிரதிவாதி வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த பிரச்சினையால் எனது அம்மா எனது திருமணத்தில் கலந்து கொள்ளவில்லையென்றால் சரியல்ல. எனது அம்மா எனது திருமணத்தில் கலந்து கொண்டதற்காக ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் இல்லை.

எனது அப்பாவை துரத்தி விட்டதற்கு பிறகு எனது அம்மாவும் அப்பாவும் 1ம் பிரதிவாதியின் வீட்டில் சிறிது காலம் இருந்து விட்டு தாவா ஏ அட்டவணை சொத்தில் 2001 ம் ஆண்டு வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஆரம்பத்திலிருந்தே தாவா ஏ அட்டவணை சொத்தில் வசித்து வந்தார்கள். எனது அம்மா இறக்கும் வரை தாவா ஏ அட்டவணை சொத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். எனது அம்மா இருந்த வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் கால் அல்லது அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் . எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட தாவா பி அட்டவணை சொத்தை எனது அம்மாவின் பெயருக்கு கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

ஆரம்பத்தில் இருந்தே எனக்கும் எனது சகோதரிகளுக்கும் உறவுமுறை சரியில்லை என்றால் சரியல்ல. பெரிய சகோதரிக்கு நான்தான் திருமணம் செய்து வைத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான நிர்பந்தம் எதனால் ஏற்பட்டது என்றால் உயில் இருந்ததால் தாக்கல் செய்தேன். நான் எனது சகோதரிகளிடம் சென்று சொத்தை பிரித்துக் கொள்ளலாம் என்று நேரடியாக கேட்டேனா என்றால் கேட்கும் நிலையில் இல்லை. சாட்சி மீண்டும் கேட்கவில்லை என்று சொல்கிறார். முதன்முதலாக எனது அம்மா உயில் எழுதி வைத்தது குறித்து எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு தெரியும்.

பிராதிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் உயில் எழுதி வைத்தது வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு தெரியும் என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா. ஆ 6 உயில் ஆவணத்தில் யார் யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் சேரக்கூடியது என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தில் உள்ள சரத்துக்கள் யாரிடம் கூறி யாரால் தயாரிக்கப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சி ராமமூர்த்தி எனக்கு உறவினரா என்றால் உறவினர் இல்லை. சாட்சி ராமமூர்த்தியின் வீட்டிற்கும் எனது அம்மா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1-1/2 கி. மீட்டர் இருக்கும்.

எனது அம்மா இறக்கும்போது எவ்வளவு வயது என்றால் சுமாராக 70 இருக்கும். சாட்சி ராமமூர்த்திக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. உயிலில் எனது அம்மாவிற்கு வியாதி இருப்பதாக சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். முதன்முதலாக நான் உயிலை பார்த்தபோது அசலை பார்த்தேனா என்றால் அசலைதான் பார்த்தேன். உயிலில் எனது அம்மா இறந்த பிறகு சொத்துக்கள் அனைவருக்கும் சரிசமமாக போகவேண்டும் என எழுதியிருக்கிறார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும் எனது அம்மாவிற்கும் என்ன வயது வித்தியாசம் என்றால் எனக்கு தெரியாது.

உயிலில் தன்னைவிட வயது மூத்த கணவர் உயிரோடு இருப்பார் என்ற எண்ணத்தில் அவருக்கு முன்பே தான் இறந்து விடுவேன் என்ற எண்ணத்தில் எழுதிவைத்திருக்கிறார் என்றால் சரிதான். வா.சா. ஆ 6 உயில் எனது அம்மா இறந்த

பிறகு எழுதப்பட்டது என்றும் அதனால்தான் அந்த சமயத்தில் எனது தந்தை உயிரோடு இருந்ததால் அவருக்கும் சேர்த்து சொத்து கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 12.09.2019 க்கு முன்பு சாட்சி ராமமூர்த்தியை எத்தனை முறை பார்த்திருக்கிறேன் என்றால் ரோட்டு ஓரத்தில் வழியில் அவர் போவார் வருவார் அந்த சமயத்தில் பார்த்திருக்கிறேன். அந்த சமயத்தில் சாட்சி ராமமூர்த்தி எனக்கு பழக்கம் என்றால் எனக்கு அந்தளவில் பழக்கம் இல்லை. 12.09.2019 க்கு முன்பு எனது அம்மா உயில் எழுதி வைத்தது குறித்து சொன்னாரா என்றால் இல்லை. உயில் எழுதிய பிறகாவது சாட்சி ராமமூர்த்தி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எனது அப்பாவுடன் நல்ல உறவுமுறையில் இருந்தோம் என்றால் சரிதான். எனது அப்பாவிடம் அம்மா உயில் எழுதி வைத்தது குறித்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

எனது அப்பாவிற்கு எனது அம்மா எழுதி வைத்த உயில் பற்றி தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு எனது அப்பாவை வைத்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது அப்பா தான் வழக்கு தாக்கல் செய்தார். உண்மையில் உயில் எழுதப்பட்டிருந்தால் கணவரை விட்டு 3-வது நபரை வைத்து உயில் எழுதி வைக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. 12.09.2019 ல் எனது அம்மாவும் அப்பாவும் ஒன்றாகதான் இருந்து வந்தார்கள் என்றும் எனது அம்மா இறக்கும் வரையில் ஒன்றாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 6-வது பத்தியில் பிரதிவாதிகள் இருவரும் அவர்கள் வசம் உயில் ஆவணம் இருப்பதாக கூறி அதை யாரிடமும் காட்ட மறுத்து விட்டார்கள் என்று எப்போது சொன்னார்கள் என்றால் எனது அம்மா இறந்து 2, 3 நாட்களில் சொன்னார்கள். அவர்களிடம் உயில் ஆவணம் இருந்ததா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் பெயரில் எனது அம்மா உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியும். இந்த விபரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும். பிரதிவாதிகளின் பெயரில் எழுதி வைத்த உயிலை பற்றி எனது அம்மா பொதுவாக எழுதி வைத்த உயிலைபற்றி முன்பே தெரியுமா அல்லது அதற்கு பிறகு தெரியுமா என்றால் 2019 ம் வருட உயிலுக்கு பிறகுதான் தெரியும். 2011 ம் வருடத்திய உயிலில் உள்ள கையெழுத்து எனது அம்மாவின் கையெழுத்து என்றால் அது என் அம்மாவின் கையெழுத்தை போல் தெரியவில்லை.

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 8-வது பாராவில் உயில் ஆவணத்தில் Material Alteration ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன Material Alteration என்றால் அதில் எனது அப்பா மற்றும் என்னை பற்றி சொல்லவில்லை. அதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா. ஆ. 5 ல் உயிலிலுள்ள எனது அம்மாவின் கையெழுத்து இல்லை என்பதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். 2019 ம் ஆண்டு பொது வாக எழுதப்பட்ட உயிலில் உள்ள கையெழுத்து எனது அம்மாவின் கையெழுத்து என்பது குறித்து தடய அறிவியல் துறைக்கு அனுப்புவதற்கு ஆட்சேபணை இல்லையென்றால் சரிதான்.

2019-ம் வருடத்திய உயிலில் உள்ள இரண்டாவதாக சாட்சி யார் என்றால் எனது அம்மாவின் அக்கா தங்கை உறவினர். 13.06.2011 ம் தேதியில் எனது தாயார் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.140/2011 படி தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் பதிவு செய்யப்பட்ட உயிலை எழுதி வைத்துள்ளார் அதன்படி என் தாயார் இறந்த பிறகு தாவா சொத்துக்களுக்கு 1,2 பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. எனது அம்மா வங்கியில் வைத்திருந்த கணக்குகளுக்கு 1,2 பிரதிவாதிகள் நாமினியான நியமணம் செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். 15.04.1999 பாகப்பிரிவினைப்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த சொத்துக்களும் ஒதுக்கப்படாததால் தனது காலத்திற்கு பிறகு தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு சேரவேண்டும் என்ற காரணத்தினால் மேற்படி பதிவு செய்யப்பட்ட வா.சா. ஆ 5 உயில் சாசனம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

ஏற்கனவே ஒரு உயில் சாசனம் எழுதப்பட்டுள்ள நிலையில் மேற்படி உயில் சாசனத்தை ரத்து செய்யாமல் வா.சா. ஆ 6 உயில் சாசனம் எழுதப்பட்டதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு உயில் எழுதவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் வா.சா. ஆ 5 உயில் சாசனத்தை ரத்து செய்து விட்டு வா.சா. ஆ 6 உயில் சாசனத்தை எழுதியிருப்பார் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு தெரியாத ராமமூர்த்தியிடம் மேற்படி உயில் ஒப்படைப்பதற்கான வாய்ப்பு இல்லையென்றும் மேற்படி ராமமூர்த்தி எனக்கு வேண்டியவர் என்பதால் வழக்கிற்காக வா.சா. ஆ 6 உயில் சாசனத்தை தயாரித்து

அவர் கையொப்பமிட்டதாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா எங்கு இறந்தார் என்றால் தாவா ஏ அட்டவணை சொத்தில் இறந்தார். எனது அம்மாவின் உடலை எனது வீட்டிற்கு கொண்டுவர மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல.

எனது அம்மாவின் இறுதி காரியத்தில் அனைவரும் கட்டாயப் படுத்தியதால்தான் செய்தேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளை வீட்டிற்கு வர அனுமதிக்காததால்தான் அவர்கள் இறுதி காரியத்தின்போது வீட்டிற்கு வெளியே காத்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் இருக்கும்போது அதை ரத்து செய்யாமல் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் இருப்பதாக கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.121/2023 என்ற வழக்கு பிரதிவாதிகள் தங்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

13.06.2011 ம் தேதியிட்ட உயில் சாசனத்தின்படி எனது தாயார் இறந்த பிறகு 1,2 பிரதிவாதிகள் ஆகியோர்கள் தான் தாவா சொத்தின் பரிபூரண உரிமையாளர்கள் அவர்கள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதி களின் சுவாதீனத்தை 06.02.2020 ம் தேதி தடை செய்ததால்தான் அசல் வழக்கு எண்.121/2023 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.155/2019 தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.121/2023 வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.